மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.02/2024
அ.வ.எண்.09/2024

1. K.கந்தசாமி
2. P.பெருமாயி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. K.பழனிசாமி
2. V.வெங்கிடு
3. V.ஜெயா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 17.03.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.S.மாரியப்பன், திரு.P.ராஜசேகர் மற்றும் திரு.G.ராமசந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.ரணதேவ் அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.நந்தகுமார் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பில் தமது வாதங்களை முன்வைக்காத நிலையில், மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டதாக கருதப்பட்டும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரையை கருத்தில் கொண்டு தகுதிப்பாட்டின் அடிப்படையில் தகுந்த உத்தரவு பிறப்பிக்க கோரி மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39 விதிகள் 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதிகள்/மனுதாரர்களால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி

பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 27.04.2016ம் தேதியில் குட்டிபூசாரி மற்றும் அவரது மகன் வைரக்கவுண்டன் ஆகியோரிடமிருந்து தாவா 1வது அயிட்ட சொத்தை 1ம் மனுதாரர் கிரயம் பெற்று, எவ்வித இடையூறுமின்றி சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தார். தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் மனுதாரரை தவிர வேறு யாருக்கும் எவ்வித உரிமையோ, பாத்தியமோ கிடையாது. இந்நிலையில் கடந்த 08.12.2023ம் தேதியில் 1,2 எதிர்மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரருக்கு சட்டத்திற்கு புறம்பாக தாவா 2வது அயிட்ட சொத்தையும் சேர்த்து கிரயம் செய்தது குறித்து 1ம் மனுதாரருக்கு தெரியவந்தது.

(ii) மேற்படி கிரய ஆவணத்தில் தாவா 2வது அயிட்ட சொத்தில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட 2/7 பாகத்தை மனுதாரர்களின் குடும்பத்தினரிடமிருந்து 1ம் எதிர்மனுதாரர் 2013ம் வருடம் தானசெட்டில்மெண்ட் பெற்றுள்ளதாக வாசகங்கள் கண்டுள்ளது. ஆனால் மேற்படி தாவா 2வது அயிட்ட சொத்தானது மனுதாரர்களின் பாகம் பிரிக்கப்படாத பூர்வீக சொத்தாகும். மேற்படி உண்மையை மறைத்து மோசடியாக 1ம் எதிர்மனுதாரர் தன் பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை பெற்றுள்ளார். மேற்படி மோசடி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணங்களும் மோசடியானவைகள் ஆகும். மேற்படி மோசடி ஆவணங்களின் அடிப்படையில் கடந்த 05.01.2024ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களில் அத்துமீறி நுழைந்து பிரச்சனை செய்ததால் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்:</u>

<u>(1, 2 பிரதிவாதிகளின் பதிலுரையை குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்களால் தங்களது எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது)</u>

மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் செல்லதக்கதல்ல. தாவா 2 அயிட்ட சொத்து மனுதாரர்களின் பூர்வீக சொத்து என்பது தவறாகும். மேற்படி

சொத்து மனுதாரர்களின் தந்தையின் சுயார்ஜித சொத்தாகும். மேற்படி சுயார்ஜித சொத்தை பொறுத்து கடந்த 24.07.2013 ம் தேதியில் 1 ம் எதிர்மனுதாரர் பெயரில் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி சங்கதி மனுதாரர்களுக்கு நன்கு தெரியும் என்பதால் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை மறுக்க மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்ததாக கூறுவது வழக்குமூலத்திற்காக வனையப்பட்ட கற்பனை சங்கதிகளாகும். எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 2 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

<u>3) 3 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் 3 ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் செல்லதக்கதல்ல. தாவா சொத்துக்களை முறையாக வில்லங்கங்களை பரிசீலித்த பின்பு தான் 3 ம் எதிர்மனுதாரர் 1, 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார். 3 ம் எதிர்மனுதாரர் பெயரிலுள்ள கிரய ஆவணம் மோசடியானது என்பது தவறாகும். 1 ம் எதிர்மனுதாருக்கு 2013 ம் வருட தானசெட்டில்மெண்ட் ஆவணப்படி தாவா 2 வது அயிட்ட சொத்தில் செல்லத்தக்க உரிமைமூலம் உள்ளது. மேற்படி உரிமையை தான் 1, 2 எதிர்மனுதாரர்கள் 3 ம் எதிர்மனுதாருக்கு கிரயம் அளித்துள்ளனர். இதில் சட்டத்திற்கு புறம்பான செயல் எதுவும் இல்லை. எனவே செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென 3 ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

4) இருதரப்பு வாதுரைகளும் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>5) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் வாதிகள்/மனுதாரர்களால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், கடந்த 27.04.2016ம் தேதியில் குட்டிபூசாரி மற்றும் அவரது மகன் வைரக்கவுண்டன் ஆகியோரிடமிருந்து தாவா 1வது அயிட்ட சொத்தை 1ம் மனுதாரர் கிரயம் பெற்று, எவ்வித இடையூறுமின்றி சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தார் என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் மனுதாரரை தவிர வேறு யாருக்கும் எவ்வித உரிமையோ, பாத்தியமோ கிடையாது என்றும், இந்நிலையில் கடந்த 08.12.2023ம் தேதியில் 1,2 எதிர்மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரருக்கு சட்டத்திற்கு புறம்பாக தாவா 2வது அயிட்ட சொத்தையும் சேர்த்து கிரயம் செய்தது குறித்து 1ம் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும் கூறியுள்ளது தெரிய வருகிறது.

(ii) மேற்படி கிரய ஆவணத்தில் தாவா 2வது அயிட்ட சொத்தில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட 2/7 பாகத்தை மனுதாரர்களின் குடும்பத்தினரிடமிருந்து 1ம் எதிர்மனுதாரர் 2013ம் வருடம் தானசெட்டில்மெண்ட் பெற்றுள்ளதாக வாசகங்கள் கண்டுள்ளது என்றும், ஆனால் மேற்படி தாவா 2வது அயிட்ட சொத்தானது மனுதாரர்களின் பாகம் பிரிக்கப்படாத பூர்வீக சொத்து என்றும், மேற்படி உண்மையை மறைத்து மோசடியாக 1ம் எதிர்மனுதாரர் தன் பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை பெற்றுள்ளார் என்றும், மேற்படி மோசடி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணங்களும் மோசடியானவைகள் என்றும், மேற்படி மோசடி ஆவணங்களின் அடிப்படையில் கடந்த 05.01.2024ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களில் அத்துமீறி நுழைந்து பிரச்சனை செய்ததால் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iii) 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா 2 அயிட்ட சொத்து மனுதாரர்களின் பூர்வீக சொத்து என்பது தவறானது என்றும், மேற்படி சொத்து மனுதாரர்களின் தந்தையின் சுயார்ஜித சொத்து என்றும், மேற்படி சுயார்ஜித சொத்தை பொறுத்து கடந்த 24.07.2013 ம் தேதியில் 1 ம் எதிர்மனுதாரர் பெயரில் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி சங்கதி மனுதாரர்களுக்கு நன்கு தெரியும் என்பதால் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை மறுக்க மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்ததாக கூறுவது வழக்குமூலத்திற்காக வனையப்பட்ட கற்பனை சங்கதிகள் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iv) 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்துக்களை முறையாக வில்லங்கங்களை பரிசீலித்த பின்பு தான் 3 ம் எதிர்மனுதாரர் 1, 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றும், 3 ம் எதிர்மனுதாரர் பெயரிலுள்ள கிரய ஆவணம் மோசடியானது என்பது தவறானது என்றும், 1 ம் எதிர்மனுதாரருக்கு 2013 ம் வருட தானசெட்டில்மெண்ட் ஆவணப்படி தாவா 2 வது அயிட்ட சொத்தில் செல்லத்தக்க உரிமைமூலம் உள்ளது என்றும், மேற்படி உரிமையை தான் 1, 2 எதிர்மனுதாரர்கள் 3 ம் எதிர்மனுதாரருக்கு கிரயம் அளித்துள்ளனர் என்றும், இதில் சட்டத்திற்கு புறம்பான செயல் எதுவும் இல்லை என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(v) மனுதாரர்கள் தரப்பில் தமது வாதங்களை முன்வைக்காத நிலையில், மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டதாக கருதப்பட்டும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரையை கருத்தில் கொண்டு தகுதிப்பாட்டின் அடிப்படையில் தகுந்த உத்தரவு பிறப்பிக்க கோரி மேற்குறிப்பு செய்ததன் பேரிலும், வாதுரைகளை பரிசீலித்ததின் பேரிலும், இவ்வழக்கு சங்கதிகளை பரிசீலனை செய்கையில், வாதிகள்/மனுதாரர்களால், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து மோசடி கிரய ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டதாக கூறுவது பொய்யானது என்றும், தாவா சொத்தில்

அத்துமீறி நுழைந்து இடையூறு செய்ததாக கூறுவது பொய்யானது என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(vi) மேற்படி இருதரப்பு வாதுரைகளையும் கருத்தில் கொள்கையில், இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் சங்கதி யாதெனில், இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் நபர் வழக்கில் தனக்குள்ள முதல்தோற்ற வழக்கு (Prima facie case), வசதியின் சமநிலை (Balance of convenience), ஈடு செய்ய இயலா இழப்பு (Irreparable Loss) ஆகியவற்றை நிரூபிக்க வேண்டும் என்பதே ஆகும். அவ்வகையில் மனுதாரர்கள் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு உண்டான முதல் தோற்ற வழக்கை நிரூபித்துள்ளனரா? என்பதை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் இம்மனுவில் தங்கள் முதல்தோற்ற வழக்கை நிரூபிக்கும் வகையில் எவ்வித ஆவணங்களையும் குறியீடு செய்ய முன்வரவில்லை என தெரியவருகிறது.

(vii) இந்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றத்தால், **“(2012) 5 SCC 370, Maria Margarida Sequeira Fernandes v. Erasmo Jace De Sequeira”** என்ற வழக்கில், பத்தி 86 ல், (a) prima facie case; (b) balance of convenience; and (c) irreparable injury; which guide the court in this regard. In the broad category of prima facie case, it is imperative for the court to carefully analyse the pleadings and the documents on record and only on that basis the court must be governed by the prima facie case. **In grant and refusal of injunction, pleadings and documents play a vital role**...”என்ற சட்டநிலைப்பாட்டை வகுத்துரைத்துள்ளது தெரியவருகிறது. மேற்கண்ட சட்டநிலைப்பாட்டை கருத்தில் கொள்கையில், மனுதாரர்கள் மனுவில் எவ்வித ஆவணங்களையும் தங்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தாத நிலையில், மனுதாரர்கள் தங்கள் முதல்தோற்ற வழக்கில் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(viii) அடுத்ததாக, மனுதாரர்கள் கோரும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படாவிட்டால், மனுதாரர்களுக்கு எவ்வித ஈடு செய்ய இயலா இழப்பு (Irreparable Loss) ஏற்படும் என்பது குறித்து மனுதாரர்கள் காண்பித்துள்ளனரா? என்பதை பரிசீலனை செய்கையில், மனு பிரமாணப்பத்திரிக்கை பத்தி 7 ல், “... I have made out a Prima-facie case and the balance of convenience also tilts in my favour ...” என மனுதாரர்கள் தெரிவித்துள்ளது

தெரியவருகிறது. மேற்படி மனு பிரமாணப்பத்திரிக்கையில் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் தங்களுக்கு ஈடுசெய்ய இயலா இழப்பு (Irreparable Loss) ஏற்படும் என்றோ, அது நஷ்ட ஈட்டுத்தொகையால் ஈடு செய்ய இயலாது என்றோ குறிப்பாக வாதுரைக்கவில்லை என தெரியவருகிறது.

(ix) இந்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றத்தால், **"AIR 2012 SC 2448, Best Sellers Retail India (P) Ltd., vs. Aditya Nirla Nuvo Ltd.,"** என்ற வழக்கில், பத்தி 14 ல், "... the settled principle of law is that even where prima facie case is in favour of the plaintiff, the court will refuse temporary injunction if the injury suffered by the plaintiff on account of refusal of temporary injunction **was not irreparable**..." என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அதேபோல் மாண்பமை உச்சநீதிமன்றத்தால், **"1992 (1) SCC 719, Dalpat Kumar & Anr. v. Prahlad Singh & Ors."** என்ற வழக்கில்,

> "Satisfaction that there is a prima facie case by itself is not sufficient to grant injunction. The court further has to satisfy that non-interference by the court would result in **"irreparable injury"** to the party seeking relief and that there is no other remedy available to the party except one to grant injunction and he needs protection from the consequences of apprehended injury or dispossession. **Irreparable injury, however , does not mean that there must be no physical possibility of repairing the injury, but means only that the injury must be a material one, namely, one that cannot be adequately compensated by way of damages.**"

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(x) மேற்கண்ட முன்தீர்ப்புகளில் வகுத்துரைக்கப்பட்டுள்ள சட்டநிலைப்பாடுகளை கருத்தில் கொள்கையில், மனுதாரர்கள் தரப்பில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்குரிய முதல்தோற்ற வழக்கையும், மேற்படி பரிகாரம் வழங்கப்படாவிட்டால் தங்களுக்கு ஈடு செய்ய இயலா இழப்பு ஏற்படும் என்பதையும் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதேபோல் இச்சூழ்நிலையில் மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள உறுத்துக் கட்டளை பரிகாரத்தையே இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரர்களால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன்

தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xi) மேற்படி தாவா சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சட்டம் மற்றும் சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xii) மேற்படி இந்நீதிமன்றத்தின் கருத்திற்கு வழிகாட்டும் விதமாக, மாண்பமை உச்சநீதிமன்றத்தால் ***"Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"*** என்ற வழக்கில்,

> "It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாடுகளின் அடிப்படையில் மனுதாரர்கள் முதல்தோற்ற வழக்கை நிரூபிக்காத நிலையிலும், தங்களுக்கு ஈடுசெய்ய இயலா இழப்பு ஏற்படும் என்பதை நிரூபிக்காத நிலையிலும், வழக்கானது விசாரணைக்கு தயாராக உள்ளதை கருத்தில் கொள்கையிலும், மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2025.04.03 11:31:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2025.04.03 11:31:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.